**பூநகரி பிரதேச சபை -2023**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பூநகரி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூநகரி பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன்

ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிறைவேற்றப்பட்ட 04 கட்டிடங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 2,475,228 நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கையில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வேலைகள் பூர்த்தியாக்கப்படாத 04 நிர்மாண வேலைகளுக்குரிய ரூபா 3,749,994 தொகையான மதிப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | கொடுப்பனவு சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டதும் இந்நிலுவைகள் சீர்செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 10,938,659 கிரயத்தில் கொள்வனவு | 2024 ஆம் ஆண்டு இறுதிக்கணக்கறிக்கையில் | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட 11 தளபாடங்கள் மற்றும் 23 கணினி தொகுதிகள் பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | 03 மோட்டார் வாகனங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,250,000 தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | கிடைக்கப்பெற்ற முற்பணம் ரூபா 1,522,075 தொகை முற்பணக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | ரூபா 283,835 பெறுமதியான 40 எண்ணிக்கையான ஆயர்வேத மருந்து பொருட்கள் மற்றும் ரூபா 199,129 பெறுமதியான 25 ஊழியர் பிணைப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 விடயங்கள் தொடர்பில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரேட்டு மீதிகளுக்கும் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதிகளுக்குமிடையில் கூட்டுமொத்தம் ரூபா 1,102,260 வேறுபாடொன்று காணப்பட்டது. | சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் உரிய மூல ஆவணங்களுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571(1),(2),(3) | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 02 காலங்கடந்த வைப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 227,252 சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 14,463,227 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,279,869 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | 1,336,605 | 793,750 | 793,750 | - |
| (ii) | வாடகை | 8,679,389 | 13,829,873 | 8,642,335 | 5,187,538 | 5,381,574 | 8,725,969 | 4,594,805 | 4,131,164 |
| (iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 2,204,500 | 2,160,825 | 2,160,825 | - | 533,500 | 1,273,250 | 1,273,250 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,499,288 | 46,172,843 | 41,262,441 | 4,910,402 | 9,915,739 | 19,881,350 | 3,009,516 | 16,871,834 |
| | கூட்டுத் தொகை | **21,383,177** | **62,163,541** | **52,065,601** | **10,097,940** | **17,167,418** | **30,674,319** | **9,671,321** | **21,002,998** |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள குத்தகைகள், வாடகைகள் மற்றும் வியாபார உரிமத்தீர்வை ரூபா 6,026,306 ஆக காணப்பட்டது. | அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலுவைகள் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது ஒதுக்கத்தில் 05 வருடங்களுக்கு மேலாக காணப்படும் ரூபா 7,564,999 தொகையினை மூலதன செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு | வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | மூலதன செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

**3.2 பயன்படுத்தப்படாத ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி நிதி ஊடாக நூலக மேம்பாட்டிற்கென கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,738,800 ஆன 14 கணினி தொகுதி மற்றும் தளபாடங்கள் குறிப்பிட்ட நோக்கதிற்கு உபயோகிக்கப்படாமலுள்ளன. | நூலகங்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்களை பூரணமாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 05 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வந்த 05 வாகனங்கள் மற்றும் 158 ஏக்கர் விஸ்தீரணமுடைய 89 காணிகள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சபைக்கு உரித்தாக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு, சேகரிக்கப்பட்டு, மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டில் குப்பைகளை அகற்றும் செயற்பாடுகளுக்காக கூட்டுமொத்தம் ரூபா 2,400,050 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மீள் சுழற்சிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | கழிவு முகாமைத்துவ முறைமை முறையாக பின்பற்றப்பட வேண்டும்.. |